# தூதுவர் தேசாயை வெளியேற்ற!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

| | | | |
|---|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 6உ புதன் | (21—7—54) | மலர்: 2 |
| இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 7உ வியாழன் | (22—7—54) | இதழ்: 32 |


## கவர்னர் சம்பளத்தைக் குறைக்கக் கிளர்ச்சியும் போராட்டமும்

### ஈரோடில் பொதுச்செயலாளர் அறிவிப்பு

15—7—54 மாலை 7-மணிக்கு, ஈரோடு காரைவாய்க்கால் மைதானத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பின் பல தோழர்கள் பேசினார்கள். கடைசியாகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

அவர் பேச்சுகையில், ஜூலை போராட்டம் நன்கு நடந்தது என்பதை விளக்கி சென்ற ஆண்டு முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் செய்த கேடுகளும், அவர் ஜனநாயகத்தை மதிக்காமல் செய்த அநீதிகளையும் எடுத்துக் காட்டி, தி. மு. கழகம், அவரது ஆட்சிக்கு எதிராக செய்த போராட்டத்தில் வெற்றி கண்ட பெருமை குறித்தும், காமராசரை தி. மு. கழகம் பாராட்டுவதற்குரிய காரணத்தைத் தெளிவாக விளக்கியும், கம்யூனிஸ்டுகளின் தவறான பிரசாரத்திற்கு விளக்கம் தந்தும், இன்னும் 6 மாதத்தில் சென்னை கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்பட வேண்டும், இல்லையேல் அதற்கான கிளர்ச்சியும் போராட்டமும் தி. மு. கழகம் துவக்க வேண்டி வரக்கூடும் என்றும், வடநாடு செழிக்கும் திட்டம் குறித்தும், தென்னாடு தேய்வுறும் போக்கு பற்றியும், 7 ஆண்டு கால டில்லி சர்க்காரின் நிர்வாக ஊழல் குறித்தும், நேருவுக்கு தகுதியுள்ள தலைவர்கள் இல்லை என்பதை எடுத்துக் காட்டியும், அமெரிக்கா இந்திய சர்க்காருக்கு செய்யும் பண உதவி குறித்தும், தற்கால அரசியல் நிலையை தெளிவுபடுத்தியும் 1½ மணி நேரம் மிக கருத்துள்ள உரையாற்றினர்.

பின்னர் காங்கிரசில் எல்லோரையும் ஒன்றுபடுத்தி ஆள

### உதவி

இந்தியப் படமொன்றைத் திரையிடக் கூடாதென்று ஆர்ப்பாட்டம் செய்து கைதான லாகூர் மக்களுக்கு வழக்காட எல்லா உதவிகளையும் அளிக்க பாக் பிலிம் சம்மேளனம் ஒரு குழுவை நியமித்துள்ளது.

### சாட்சியம்

டில்லி தனி நீதிபதி, சர்தார் குருதேவ் சிங் முன்பு, இரண்டாவது உரவோ ஊழல் வழக்கில் சர்க்கார் தரப்பில் உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி சாட்சியமளித்தார்.

### சேமிப்பு

ஜூலை 8-ம் தேதி வரையில் 84,740 பேர்கள் ரூ 87 34 லட்சம் மதிப்புள்ள தேசிய திட்ட சர்டிபிகேட்டுகளை வாங்கியிருப்பதாக இந்திய சர்க்கார் காரியாலய செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## கருத்துரை அளியுங்கள்

கவர்னர் சம்பளச் செலவு இந்த நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்ற அளவுக்கு மிகவும் அதிகமாக இருக்கிறது.

★

கவர்னர் சம்பளச் செலவு மிக அதிகம் என்பதை எல்லா முற்போக்குக் கட்சிகளும் எடுத்துக் கூறியுள்ளன.

★

500 ரூபாய்க்கு மேல் சம்பளம் தரப்படாது என்று காங்கிரஸ் கட்சியும், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கூறியிருக்கிறது.

★

கவர்னர் பதவியே, வெறும் அலங்காரத்துக்கும் ஆடம்பரத்துக்கும் தான் பயன் படுகிறது என்று கருதுவோரும் உண்டு.

★

இங்கு, வடநாட்டுக்காரர் கவர்னர் வருகிறார் என்றபோது, கருப்புக்கொடி காட்டி எதிர்ப்புணர்ச்சியை எடுத்துரைத்தபோதும், இக் கருத்துக்கள் பேசப்பட்டன.

★

தி. மு. க. பொதுச்செயலாளர் ஈரோடில் சென்ற கிழமை பேசும்போது கவர்னர் சம்பளச் செலவு வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான கிளர்ச்சியும் போராட்டமும் நடத்தப்பட வேண்டி நேரிடலாம் என்றும் கூறினர்.

★

எப்போது? எப்படி? என்று சிலர் கேட்டுள்ளனர்.

★

வேறு சிலர்—ஆனால் அவர்கள் தி. மு. கழகத்தின் எல்லா நடவடிக்கைகளையும் கண்டிப்பவர்கள்—கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்ற பொருள்பட எழுதுகிறார்கள்.

★

தங்கள் கருத்து என்ன?

★

கவர்னரின் சம்பளச் செலவு இப்போது உள்ளபடியே இருக்க வேண்டியதுதானா?

★

இப்படி ஒரு பெரும் செலவு நியாயந்தானா?

★

கிளர்ச்சி எப்படி இருக்க வேண்டும், போராட்டம் எப்படி இருத்தல் வேண்டும், என்ற முறை பற்றிப் பிறகு கவனித்துக் கொள்ளலாம், கவர்னர் சம்பளச் செலவு இவ்வளவு பெருந்தொகையாக இருக்கத்தான் வேண்டுமா, என்பது பற்றித் தங்கள் கருத்தைச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள். நாடு அறியட்டும்.

—"நம் நாடு"

## முன்னாள் பிரதமர் டட்லியின் கோரிக்கை!

### நிறைவேற்றுவதாக பிரதமர் கொத்தலாவலை வாக்குறுதி

இலங்கையில், இந்தியாவின் தூதராக இருந்துவரும் தேசாய், சிலோன் உள்நாட்டு விவகாரத்தில் குறுக்கிடும் தோரணையில் நடந்து கொண்டார் என ஏற்கனவே, சிலோன் பார்லிமெண்ட் கூட்டத்தில் உறுப்பினர்களால் குறைகூறப்பட்டது. அதுபோலவே, அமைச்சர் குழுவைச் சார்ந்த கட்சியினர் நடத்திய கட்சிக் கூட்டத்திலும், முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா. தேசாயை இலங்கையை விட்டு வெளியேற்ற வேண்டுமென வலியுறுத்திக் கூறியுள்ளார். அதை ஆதரித்து இரண்டு கூட்டு அமைச்சர்களும், வியாபார மந்திரியாக இருந்து அண்மையில் விலகிய ஆர். ஜி. சேனநாயகாவும் பேசியுள்ளனர்.

திங்கள் முடிவிற்குள், அமைச்சர் குழுவைக் கலந்து கொண்டு, உறுப்பினர்கள் கோரிக்கையில் 'தகுந்த நடவடிக்கை' எடுத்துக் கொள்வதாக பிரதமர் கொத்தலாவலை உறுதி கூறினர்.

இலங்கையில் உள்ள இந்தியத் தமிழ் மரபினர்களுக்கு எனத் தரப்பட்டுள்ள தனித் தொகுதி தேர்தல் முறையை 10 ஆண்டு காலத்துக்குக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக, இலங்கை பார்லிமெண்டு மேலும் கால அளவைக் கூட்டி சட்டமியற்றியுள்ளது. டெல்லியில் செய்துகொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு விரோதமானது எனவும், அது குறித்து, நிருபர்களுக்களித்த பேட்டியில் இந்தியத் தூதர் தேசாய், மேற்படி விஷயத்தில் இலங்கை சர்க்கார் நடந்து கொண்டது 'பித்தலாட்டமானது' எனக் கூறியதாக, சிலோன் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

இந்தியத் தூதர் தேசாய், பிரதமர் கொத்தலாவலையை நேரில் சந்தித்து. தாம் அவ்வாறு குறிப்பிடவில்லை என திட்டவட்டமாகக் கூறி இருந்தார். அதை நம்பாமல், அவரை வெளியேற்ற வேண்டுமென மந்திரி கட்சியில் முக்கியமாக உள்ள சிலர் கருதுக் கொண்டுள்ளனர். இது பற்றி இந்திய சர்க்காரைக் கலந்து கொண்டு தக்கது செய்வதாக பிரதமர் கொத்தலாவலை, குறை பட்டவர்களுக்கு உறுதி தந்துள்ளார்.

## சிறைத் தண்டனை பெற்றத் திருடனின் சீற்றம்!

### மாஜிஸ்திரேட் மீது மிதியடி வீசினன்!

**8 ஆண்டுகளில் பம்பாயில் நடந்த 6-வது சம்பவம்!**

பம்பாய், ஜூலை 20—

பம்பாய் பிரதம மாஜிஸ்திரேட் மீது, திருட்டுக் குற்றத்திற்காகப் பத்து மாத சிறைத் தண்டனை பெற்ற ஒரு குற்றவாளி, தன்னைத் தவறாக தண்டிக்கப்பட்டுவிட்டதாக ஆத்திரப்பட்டு மிதியடியை மாஜிஸ்திரேட் மீது வீசினன்.

அதற்காக 10 மாத தண்டனை பெற்ற கைதி மீது வழக்கு தொடுக்கப்பட்டு, மிதியடியை வீசியதற்காக ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையை அளித்தார் அந்த மாஜிஸ்திரேட்.

சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் வாதத்தை ஒப்புக்கொண்டு மாஜிஸ்திரேட், தமது தீர்ப்பில், பம்பாய் நகரில், இதுபோன்று மாஜிஸ்திரேட் மீது மிதியடியைக் குற்றவாளிகள் வீசுவது ஐந்தாவது அல்லது ஆறாவதாக நடைபெற்றுள்ள சம்பவமாகும். எனவும், அதற்காக பிரஸ்தாபக் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைத் தர வேண்டும் எனவும் குறிப்பிட்டு, மேற்படி தண்டனையைக் கொடுத்துள்ளார்.

## இந்தோ-சீனப்போரின் விளைவு

### 1,14,000 துருப்புகளை பிரெஞ்சு பறிகொடுத்தது!

**28,000 சிப்பாய்கள் கைதிகளாக உள்ளனர்!**

பாரிஸ், ஜூலை 20—

கடந்த ஏழு ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்தோ-சீனப் போரின் காரணமாக, இதுவரை பிரெஞ்சு 1,14,000 துருப்புகளை பலி கொடுத்து இருக்கிறது எனத் தெரியவருகிறது.

இப் பெருந் தொகையில், 46,000 பிரெஞ்சு குடிமக்களும், 21,000 ஆப்பிரிக்கர்களும், 10,000 மற்ற நாட்டவர்களும், 37,000 இந்தோ-சீனத்தவரும் களத்தில் இறந்திருப்பதாகக் கணக்கிடப்படுகிறது.

வியட்மின் சுதந்திரப் படையினரிடம் கைதாகி காவலில் உள்ளவர்கள் தொகையும் பின்வருமாறு இருக்கும் கூடுமென யூகிக்கப்படுகிறது:—

பாதுகாப்புச் சிறையில் 4,000 பிரெஞ்சு சிப்பாய்கள், 6,000 வெளிநாட்டவர்கள், 6,000 ஆப்ரிக்கர்கள், 12,000 இந்தோ-சீனர்கள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 21—7—54 புதன்

# நோக்கம் என்ன?

சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக, ஐந்தாவது முறையும் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கல்வித் துறையில் அவருக்குள்ள புலமையும், அனுபவமும், அறிவு ஆற்றலும் குறைத்து மதிப்பிடக் கூடியனவல்ல. அத்துறை நிர்வாகத்திலும் அவரை மிக்காரும், ஒப்பாரும் இலையாது எனக் கொள்வது மிகையாகாது.

சென்ற நான்கு முறைகளாக, அப்பதவிக்கு, அவரே நியமிக்கப்பட்டு வந்துள்ளார். அதன் விளைவாக, கடந்த பன்னிரண்டு ஆண்டு காலமாக, டாக்டர் அவர்களே சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்து, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை, பிறர் பழிப்பதற்குத் துளியும் இடமளிக்காமல், செவ்வனே நிறைவேற்றி வந்திருக்கிறார்.

அவருடைய நிர்வாகக் காலமான சென்ற பன்னிரண்டு ஆண்டுகளில், டாக்டர் அவர்களால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட கொள்கைகளோ, புகுத்திய திட்டங்களோ, இன்னின்ன வகையில் தவறுடையனவாக இருந்தன, அவர் மேற்கொண்ட போக்கின் காரணமாக பல்கலைக் கழகத்தின் செல்வத்திற்கு வீணாகச் சேதமேற்பட்டது என எடுத்துக்காட்ட இதுவரை எவரும் முன்வரவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக ஆக, அவருடைய திறமையை மேலும் பலப்பலர் பாராட்டும் நிலைதான் வளர்ந்து வந்திருக்கிறதே யல்லாது, அவருடைய புகழையும் நிர்வாகச் சிறப்பையும் அலட்சியப்படுத்தினவர்களை நாம் மருந்துக்கும் கண்டது கிடையாது.

இந்தியத் துணைக் கண்டத்தில், சென்னை பல்கலைக் கழகத்தின் பட்டங்களுக்கு குறிப்பிடத் தகுந்த தனிச் சிறப்பு எப்பொழுதும் இருந்து வந்திருக்கின்றன. அந்தப் பாரம்பரியப் பண்பு பட்டுப்போக விட்டுவிடாமல் கட்டிக்காத்து வந்திருப்பதோடு, அந்தப் பண்பு மேலும் மேலும் ஒளிவிடும் உயர்ந்த நிலை பெறுவதற்கும், டாக்டர் அவர்கள் அரும் பாடுபட்டிருக்கிறார். அவருடைய பன்னிரண்டாண்டு சேவையால் சென்னை பல்கலைக் கழகம் எல்லாவகையிலும் சிறப்பெய்தி இருக்கிறது என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்கு, அவருடன் எவரும் போட்டியிட முன்வராததும், ஐந்தாம் முறையாகவும், செனட் உறுப்பினர்கள், அவர் ஒருவர் பெயரையே துணைவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்திருப்பதும், அதை ஒப்புக்கொண்டு பல்கலைக் கழக வேந்தர், அவரையே அப்பதவிக்கு நியமித்து இருப்பதுமே, போதிய சான்றாகும்.

திறமையானதாக அவருடைய நிர்வாகம் இருந்த போதிலும், அதனால் அவர் தனித்த முறையில் அடைந்து வரும் புகழ் கண்டு குறிப்பிட்ட சிலர், டாக்டர் அவர்கள் மீது அழுக்காறு கொள்வது எதிர்பார்க்கக் கூடியதே யாகும். அதன் காரணமாக, அவர் போக்கிலும் நிர்வாகத்திலும் குறை காண வேண்டுமென்று, குறிப்பிட்ட சிறு கூட்டம், கூர்மையாகத் தங்கள் குரூரமான பார்வையைச் செலுத்தியும் வந்திருக்கிறது. தங்கள் நச்சுக் கண் கொண்டு, அவர்கள் எவ்வளவு கூர்ந்து கவனித்து வந்தபோதிலும், டாக்டர் அவர்களின் நிர்வாகத்தைத் தூற்றச் சிறு வாய்ப்பும் பெறாது, ஏமாற்றமே பெற்றனர். ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றம் பெற்று வந்தபோதிலும், தங்கள் பரம்பரை குணத்தை மாற்றிக் கொள்ள மனமில்லாதவர்களாக, டாக்டர் அவர்களைத் தூற்றுவதற்கான வாய்ப்பை, மிகவும் விழிப்போடு, அச்சிறு கூட்டம் எதிர்நோக்கிக் கொண்டு இருந்தது. அந்தச் சிறு கூட்டம் எது வாக இருக்கும் என்பது தமிழ் நாட்டின் சமூக அமைப்பையும், அதில் இணைந்துள்ள ஒவ்வொரு வகுப்பின் நடவடிக்கைகளையும், அனுபவவாயிலாக அறிந்துள்ளவர்கள் மிகமிகத் தெளிவாக அறிவர் என்பதில் ஐயமில்லை.

ஐந்தாம் முறையாக டாக்டர் அவர்களைத் துணைவேந்தராக நியமித்திருப்பது, அவர் மீது தாக்குதல் நடத்துவதற்காக நீண்ட காலமாகத் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அச்சிறு கூட்டத்திற்கு, கிடைத்தற்கரிய வாய்ப்பாகப் போய்விட்டது. தாக்குதலையும், மிக மிக நாகரீகமாகத் தொடங்கியும் விட்டது அவ்வழுக்காறு கும்பல்.

சென்னை பல்கலைக் கழகத்திற்குத் தொடர்புடைய செனெட் சபை, துணைவேந்தர் பதவிக்கு, மூன்று நபர்களுக்கு மேல் கூடுதலாகாமல், மூன்று நபர்களை சிபாரிசு செய்ய வேண்டும் என்று பல்கலைக் கழக விதி கூறுகிறது. செனெட் சிபார்சு செய்யும் மூவரில், ஒருவரைத் துணைவேந்தராக பல்கலைக் கழக வேந்தர் நியமிக்க வேண்டும் எனவும் விதி இருந்து வருகிறது.

துணை வேந்தராக நியமிக்க, செனெட் சபை மூன்று நபர்களின் பெயர்களை சிபார்சு செய்ய வேண்டுமென விதி இருக்கிறதே யல்லாது, அதில் கண்டிப்பொன்றும் கிடையாது. அதுவுமல்லாமல மூன்று நபர்களுக்குக் குறைவாக செனெட் சிபார்சு செய்யக்கூடாது என்பதிலும் விதி கண்டிப்பாக இல்லை.

இந்த ஆண்டு துணைவேந்தர் தேர்தலில் பங்கு கொள்ள டாக்டர் அவர்களைத் தவிர, வேறு ஒருவரும் முன்வரவில்லை. தேர்தலில் போட்டியிட ஒருவரும் விரும்பாத நிலையில், துணை வேந்தர் பதவிக்கு மூன்று நபர்களுக்குக் குறையாது பெயர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே என்பதற்காக, செனெட் உறுப்பினர்கள் என்ன செய்ய முடியும்? தேர்தலில் போட்டியிட முன்வந்த ஒருவரின் பெயரைத்தானே, துணைவேந்தர் பதவிக்கு நியமிக்குமாறு, வேந்தருக்கு சிபார்சு செய்ய முடியும்? விதியின் சொற்களுக்கும் உணர்வுக்கும் விரோதமாக, செனெட் உறுப்பினர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என, சில கெடுமதியினர் குறை கூறுவது போன்று, நாமும் கொள்வதற்கு விதியில் துளியும் இடம் கிடையாது.

துணைவேந்தராக எவரை நியமிக்கலாம் என கருத்தறிவிக்கும் உரிமை செனெட் சபைக்கும், அவரை முடிவாக பதவியில் நியமிக்கும் உரிமை வேந்தருக்கும் இருக்கிறதாக விதி கூறுகிறது.

துணைவேந்தர் பதவிக்கு, செனெட் சபை மூவரைக் கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென அதற்கான விதி வலியுறுத்திக் கூறாத நிலையிலும், தேர்தலில் போட்டியிட ஒருவர் மட்டுமே முன்வந்து மற்ற எவரும் முன்வராத நிலையிலும், தேர்தலில் கலந்து கொண்ட அந்த ஒருவர் பெயரை மட்டுமே துணைவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்வதைத் தவிர, செனெட் சபைக்கு வேறு வழியே கிடையாது.

அப்படி சிபார்சு செய்யப்படும் ஒருவரை பதவியில் நியமிப்பதற்கு வேந்தருக்குள்ள அதிகாரம், பிரத்தியேக துணைவேந்தர் நியமன விவகாரத்தில் எந்த வகையிலும் பாதிக்கப்பட்டுவிடவில்லை, ஆனால் செனெட் சபைக்கு உள்ளது போன்று, பொறுக்கி எடுக்கும் உரிமைதான் இந்த நியமன விஷயத்தில் வேந்தருக்கு இல்லாமல் போயிருக்கிறது.

துணைவேந்தர் தேர்தலில் போட்டியிட எவரும் முன்வராமற் போன நிலைமை விதியையும் மரபையும் உடைத்தெறிவதாக உருவாகி விட்டது. நிலைமை உண்டாக்கிய நெருக்கடிக்கு, விதியைக் காட்டி வாதிடக் கிளம்புவது அவலமாய் கிளம்புகிறவர்களின் வயிற்றெரிச்சலைத்தான் விளக்குவதாக இருக்கிறதே ஒழிய, நியமனத்தைக் குறையுடையது எனக் காட்டுவதாக இல்லை.

இந்தக் குறையாடு அதற்கான விதியில்தான் இருக்கிறது. எனவே, விதியைக் காட்டி, டாக்டர் அவர்களுக்கு எதிராக நீண்ட காலமாக தங்களுக்குள் கொழுந்துவிட்டெரியும் பகைக்கு வெற்றி தேட, சில விஷமிகள் முன்வந்திருப்பது வேதனை தரும் விசித்திரமாகும்.

கடுகு போன்ற இவ்விஷயத்தைக் குன்று போன்றாக்கித், இந்தியத் தலைமை நீதிமன்றம் வரையில், ஆகமேதிமியாளர் கூட்டம் சென்றாலும், அதில் ஆச்சரிய மொன்றுமில்லை! பால் பெய்து சமைத்தாலும் உள்ளியின் குணம் போகாது என்பதைத்தான், அது, மெய்ப்பித்துக் காட்டியதாக முடியும்!

# திருத்தக்குழுவின் முடிவு காங்கிரசுக்குள் கொந்தளிப்பை மூட்டும்!

## காங்கிரஸ் தலைமை பண்டித நேருக்கே!

### மேலும் இரண்டாண்டிற்கு நீடிப்பு?

புதுடில்லி, ஜூலை 17—

"அகில இந்திய காங்கிரசின் அடுத்த தலைவருக்கான தேர்தல் பற்றியும், காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல் பற்றியும் சீக்கிரமே முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது"

காங்கிரசின் 60-வது மாநாடு, தமிழ் நாட்டில் நடைபெற இருக்கிறது. அதே நேரத்தில் காங்கிரஸ் தலைவரின் இரண்டு ஆண்டு பதவிக்காலமும் முடிவடைகிறது.

இப்போது காங்கிரசின் தலைவராக உள்ள பண்டித நேருவையே மீண்டும் இரண்டு ஆண்டு காலத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று தெரிகிறது.

1956-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறபடியால், நேருவின் தலைமை அப்போது மிகவும் தேவை என்று கருதுகின்றனர்.

காங்கிரசை நடத்திச் செல்ல அதன் அன்றாட அலுவல்களுக்கு ஆலோசனை கூற நேருவின் சேவை தேவை என்று காங்கிரஸ் உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

அடுத்த ஆண்டில் ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷனின் அறிக்கை வெளியாகும். மொழிவாரிப் பிரிவினை வேண்டுமென்று கோருகிற எல்லா காங்கிரஸ்காரர்களையும் திருப்தி செய்யும் அளவுக்குக் கமிஷனின் அறிக்கை இருக்காது என்பதால், மொழிவாரிப் பிரிவினை குறித்து, கடுமையான கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம்.

அந்த நிலைமையைச் சமாளிக்க, பண்டித நேரு காங்கிரஸ் தலைவராக இருக்க வேண்டுமென்றும், இல்லையேல் காங்கிரஸ்காரர்களிடையே கொந்தளிப்பு ஏற்படுமென்றும் பலர் கருதுகிறார்களாம்.

### ஜப்பானில்......!

ஜப்பானிய நீதி அமைச்சராலயம், ஜப்பானில் வாழும் வெளிநாட்டார்களின் விரல் ரேகைகளைப் பதிவு செய்ய முடிவு செய்துள்ளதாம். ஜப்பானில் வாழும் 5,60,000 கொரியர்களுக்காகவே இந்த ஏற்பாடு. கொரியர்களுக்கும்—ஜப்பானியர்களுக்கும் சுமுகமான உறவு இல்லை யென்று தெரிகிறது.

### தாராளம்!

செக்கோஸ்லோவாகியா, தனது எல்லையில் ஜூலை 4-ம் தேதியன்று கைது செய்த எழு அமெரிக்க சிப்பாய்களை விடுதலை செய்துவிட்டது. இவர்கள் வேவு பார்க்க செக்கோஸ்லோவாகியாவின் உள்ளே நுழைந்தார்கள் என்று செக் சர்க்கார் கூறியது.

### இலங்கை முடிவு

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளை தேசிய மொழிகளாக நிறைவுசெய்ய தனி இலாகா ஒன்றை இலங்கை சர்க்கார் அமைத்திருக்கிறது. விஞ்ஞானச் சொற்களையும், ஆங்கிலத்தையும் மேற்படி இரு மொழிகளிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிகிறது.

### சார்லி சாப்ளினுக்கு சீனப் பிரதமர் விருந்து

#### சூ-என்-லாய் நகைச்சுவை உள்ளம் கொண்டவராம்

ஜினிவா, ஜூலை 18—

சீனப் பிரதமர் சூ-என்-லாய், ஆங்கில நாட்டின் நகைச்சுவை மன்னரான சார்லி சாப்ளினுக்கும், திருமதி சார்லி சாப்ளினுக்கும் விருந்தொன்று அளித்தார். இச்செய்தியை சீனப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

இந்த விருந்து ஜினிவாவிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ள சூ-என்-லாயின் இல்லத்தில் நடைபெற்றது.

சீனப் பிரதமர், சார்லி சாப்ளின் படங்களை மிகவும் விரும்பிப் பார்க்கிறார் என்று தெரிகிறது. சீனப் பிரதமர் நகைச்சுவை உள்ளம் கொண்டவர் என்றும் கூறப்படுகிறது.

சமீபத்தில் வெளியான "சீனப் பிரதமர், ஈடன், மென்டேஸ் பிரான்ஸ் போன்றவர்களுடன் சேர்ந்து பேசும் புகைப் படங்களில் எல்லாம் சூ-என்-லாய் மேற்கத்திய அமைச்சர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

மேற்படி விருந்தில் கலந்து கொண்ட வெளிநாட்டவர் சார்லி சாப்ளின் ஒருவர் தான் என்று தெரிகிறது. இந்த விருந்து பல நாட்களுக்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

### நாடோடிகள் இந்திய மக்களாகிறார்கள்

#### ஒரு லட்சம் பக்தூனியர்களுக்கு காஷ்மீரில் குடி உரிமை அளிக்கப்பட்டது

ஜம்மு காஷ்மீரில் எவ்வித குடி உரிமையும் இல்லாமல் நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பக்தூனியர்கள், இன்று இந்தியக் குடிமக்களாயினர்.

ஸ்ரீநகரிலிருந்து 18 மைலுக்கு அப்பால் உள்ள குட்லி பாக் கிராமத்தில் பிரதமர் பக்ஷிகுலாம் முகம்மது, இவர்களுக்குக் காஷ்மீர் குடிஉரிமை வழங்கும் சர்டிபிகேட்டுகளை வழங்கினார்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பக்தூனியர்கள் எடுத்துக் கொண்ட பங்கிற்கு, பக்ஷி குலாம் முகமது தமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். பக்தூனியர்கள் மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவருமே பக்தூனியர்களின் தலைவரான கான் சர்தார்களைப் பற்றிப் பெருமை கொள்வதாக அவர் மேலும் கூறினார்.

பக்தூனியர்கள், பிரதமர் பக்ஷிக்கு அளித்த வரவேற்பில், காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்ததை ஆதரிப்பதாகவும் இந்திய காஷ்மீர் உறவைப் பாதுகாக்க தியாகம் செய்யத் தயார் என்றும் கூறினார்கள்.

அமெரிக்காவில் நடைபெறும் உலகப் பொருட்காட்சி ஒன்றில் வைப்பதற்காக ரத்தினங்கள் பதிக்கப்பட்ட சம்ளம் ஒன்று நியூயார்க்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

# மொழிவழி மாநில அமைப்பு அரசியல் சட்ட உணர்விற்கு முரணானதாம்!

## அந்த ஏற்பாட்டினால் சிறுபான்மையோர் பிரச்சினை கிளம்புமாம்!

### ஐதராபாத் அன்பர் அர்த்தமற்ற பேச்சு

ஐதராபாத் ஜூலை 17—

'மொழி அடிப்படையில் மாநிலங்களை திருத்தி அமைக்க வேண்டுமென்னும் கோரிக்கை இந்திய அரசியல் சட்ட உணர்வுக்கு எதிரானது,'

—என்று ஐதராபாத் உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஆர். எஸ் நாயக் என்பவர் கருத்தறிவித்தார்.

மாநில புனரமைப்புக் குழுவினரிடம் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்திய மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டுமென்பது இந்திய அரசியல் சட்டத்தின் இலட்சியமாக இருக்கும் போது மொழிவழியில் இந்தியாவைத் துண்டாடுவது, சுயநலத்தையும், போட்டி மனப்பான்மையையும் உண்டுபண்ணுவதாக அமையும், மொழிவழி மாநிலங்கள், சிறுபான்மையோர் பற்றிய பல பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைவதின் மூலம் அரசியல் சட்ட இலட்சியத்திற்கு குந்தகம் விளைவிப்பதாக அமையும்"

"பல்வேறு சுதேச ராஜ்யங்கள் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்ட பின், பல பகுதிகள், பிரித்து, திருத்தி அமைக்கப்பட வேண்டிய நிலையிலிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அப்படி திருத்தி அமைக்கப்படுவது, எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி, நிர்வாக, பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும்."

"சிலரிடையே ஏற்பட்ட அவநம்பிக்கையும் ஏமாற்றமும் பொறுமையால் தவறுகவும் உருவான கருத்துக்களை முறியடிக்கப் போதுமான பலம், பலரிடை இல்லாமற்போனதுமே, மொழிவழி மாநிலக் கோரிக்கையின் தோற்றத்திற்குக் காரணம்."

"'மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைப்போம்' என்ற உறுதிமொழியை முன்பு நமக்கே நாம் தந்து கொண்டோம். அந்த உறுதி மொழியை இன்றைய, சூழ்நிலைகளுக்கொப்ப, மாற்றிக் கொள்வதில் தவறொன்றுமில்லை. மொழிவழியில் மாநிலங்களைத் திருத்துவதினால் ஏற்படும் அற்பமான பலன்கள் இப்போதே தெரிகின்றன."

ஐதராபாத்தை துண்டாட வேண்டும் எனும் கோரிக்கையை எதிர்த்து திரு நாயக் மேலும் சொன்னதாவது:—

"ஐதராபாத்தின் நாகரிகம் ஆச்சாரியார், கவியரசி சரோஜினி, சர். ஜெ-கதூர் சாப்ரு போன்ற பிரசித்தி பெற்ற பெரியவர்களால் பாராட்டப்பட்ட ஒன்றாகும்.

"இன்றிருக்கும் நிலைக்கு ஐதராபாத்தைக் கொண்டுவர, பல வேறு மொழி பேசும் மக்களும் பாடுபட்டுள்ளனர் தங்கள் மாநிலத்தின் ஒரு பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட மொழி பேசுபவர்களின் பிறரைக் காட்டிலும், அதிக உரிமை கொண்டாடுவது, ஐதராபாத் மாநில மக்களின் நாட்டுப் பற்றிற்கு உலைவைப்பதாக முடியும்.

### சமாதானப் பிரியர்கள்!

திருமதி ரமேஷ்வரி நேரு வின் தலைமையில், சோவியத் நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும் பெண்கள் குழுவினர், ஜார்ஜியாவில் ஐந்து நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்களாம். சோவியத் மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்று திருமதி ரமேஷ்வரி நேரு கூறினார்.

### மனு தள்ளுபடி

கயானா மக்கள் கட்சியின் தலைவரான குடலம் என்பவரைத் தவறாக சிறைபிட்ட காரணத்திற்காக தனக்கு 12,000 பவுன்கள் நஷ்டஈடு கோரி தாக்கல் செய்த மனுவை கயானாவின் உயர்நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார்.

### நம்பிக்கை

ஜப்பான்-ருஷ்ய வர்த்தகத்தை அதிகமாக்கும் நம்பிக்கை இருப்பதாக ருஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்யும் ஜப்பானிய சமாதானக் கமிட்டியின் தலைவர் பேராசிரியர் யோஷிடாரோ கிராநோ தெரிவித்தார்.

### சீனா நோக்கி......!

கம்யூனிஸ்ட் சீனாவுக்கு, இரண்டாவது வர்த்தக நல்லெண்ணத் தூதுக் குழு ஒன்றை அனுப்ப, பிரிட்டிஷ்—சீன நட்புரிமைக் கழகம் முடிவு செய்துள்ளது ஆகஸ்டு மாதத்தில் அட்லி தலைமையில் தொழிற்கட்சி தூதுக் குழு ஒன்று சீனா செல்லுமென்றும் தெரிகிறது.

### அரிதப்படுமாம்!

'டிரீஸ்டி' பிரச்னையில், இத்தாலிக்கும், யுகோஸ்லேவியாவிற்கும் இடையே அடுத்த வாரத்திற்குள் ஒப்பந்தம் ஏற்படலாமென்று அமெரிக்க சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார். இதன் மூலம் பால்கன் ஒப்பந்தம் அரிதப்படுத்தப்படுமாம்.

### இளவரசராகிறார்!

ஏமென் நாட்டின் வெளிநாட்டமைச்சரான அமீர் அப்துல்லா, ஏமெனின் இளவரசராகப் பிரகடனம் செய்யப்படுவார் என்று தெரிகிறது.

### முன்னேற்பாடு!

சீனாவை மீண்டும் சியாங்-கே-ஷேக் கைப்பற்றினால், அங்கே நிறைவேற்ற அபிவிருத்தித்திட்டமொன்றை தயார் செய்யுமாறு சியாங்கே ஷேக் உத்தரவிட்டிருக்கிறார்!

### பிடிவாதம்

ஐ. நா. சபையின் பொருளாதார உதவிக்கு முன், பிற்பட்ட நாடுகளின் முன்னேற்றத்திற்கென்று ஆரம்பித்திருக்கும் நிதிக்கு உதவ இயலாது என அமெரிக்காவும், பிரிட்டனும் தெரிவித்துவிட்டன.

### சர்க்கரை

'...டன்' என்ற கப்பல் ...லிருந்து 9,500 டன் சர்க்கரையுடன் சென்னைக்கு வந்துள்ளது. இதில் 7300 டன் சர்க்கரை சென்னைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

### ஆர்ப்பாட்டம்

தங்கள் கல்லூரியின் பிரின்சிபாலை, மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்தூர் மாணவர்கள் சர்க்கார் காரியாலயத்தின் முன்னர் ஆர்ப்பாட்டம் நடத்தச் சென்றனர். போலீசார் மாணவர்களைக் கலைக்க, பலாத்கார முறைகளைக் கையாண்டனர் என்று தெரிகிறது.

### உண்ணா நோன்பு

பீகாரில் அரசியல் தியாகிகளுக்கு தாராள உதவியும், பென்ஷனும் பெறும் நோக்குடன் உண்ணாவிரதம் இருந்த கனியாம் மண்டா என்பவர், 9-வது நாளில் தனது உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

### மூலிகை

...மலையில் உள்ள மூலிகைகளின் சக்திபற்றி ஆராய சர்க்கார் ஆலோசனை செய்கிறது என்று அமைச்சர் பக்தவச்சலம் கூறியுள்ளார். இந்த மூலிகை வளாகத்தை அருவி நீர் ஆரோக்யம் தருவதாக இருக்கிறதாம்.

### கணக்குகள்

ஆந்திராவில் வியாபாரிகள், தங்கள் கணக்குகளை தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய எந்த மொழியில் வேண்டுமானாலும் எழுதலாம் என்று ஆந்திர சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

### கால்நடை தினம்

மாட்டுப் பொங்கலன்று அகில இந்திய கால்நடை தினம் கொண்டாடுவது பற்றி சென்னை சர்க்கார் ஆலோசனை செய்கிறதாம். இதுபற்றி மத்திய சர்க்காருக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

### கதவடைப்பு

பேரக்பூர் அருகே, டிட்டாகர் காகித மில்லில் 3,500 தொழிலாளர்கள் உள்ளிருந்தே வேலை நிறுத்தம் செய்ததால், மில் நிர்வாகம் கதவடைப்பு செய்துவிட்டது.

### இட மாற்றம்

காரைக்கால் டவுன் எல்லையைச் சுற்றி புதிதாக அமைக்கப்பட்ட கேட்கள் இப்போது எல்லைகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. போலீசார் இரவு பகலாக நின்று பிரயாணிகளையும், வண்டிகளையும் சோதனையிடுகின்றனர்.

### தபால் பில்லைகள்

இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன்பு வெளியிடப்பட்ட தபால் பில்லைகள் எல்லாம் இந்த ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து செல்லுபடியாகாது என்று தபால் இலாகா அறிவித்துள்ளது.

### கடன்

ஆந்திராவில், தேசீயத் திட்டக் கடனுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் வசூல் ஆகியிருக்கிறதாம்.

# தமிழகமெங்கும் மும்முனைப் போர் வெற்றி முழக்க விழா

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ல், திராவிடமெங்கும் 'மும்முனைப் போர் முழக்க நாள்' விழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கொடியேற்று விழாவும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் விமரிசையாக நடைபெற்றுள்ளன. கூட்டங்களில் தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு தரக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறி இருக்கின்றன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித்தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க் களத்தில் அடக்குமுறைக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன். அன்றைய நிகழ்ச்சிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:—

**வதுவார்பட்டி**

15—7—54 தி மு கழக சார்பில் மும்முனைப் போர் முழக்க நாள் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. தோழர் கு. துரைமணி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது கழகக் கட்டிடத்தில் செயலாளர் தோழர் எம். பி நெடுஞ்சேரலன் தலைமையில், தோழர்கள் எம் எஸ். எட்வர்ட், சின்னசாமி ஆகியோர் பேசினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

★

**நீலகிரி (ராப்ராய் கிளை)**

15—7—54ல் கழகச் சார்பில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் கழகத் தோழர்களால் நாட்டுப் பண்கள் பாடப்பட்டபின், மு. முராஜய்யா தலைமையில் தோழர்கள் கடலூர் எஸ். மோகன், கே. கணபதி, பி. ஜி துரையரசு, புரட்சிமணி, ஆகியோர் பேசியபின், மாணவ மாணவிகளுக்கும், பொது மக்களுக்கும் இனிப்பும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

★

**மங்கநல்லூர்**

15-7-54ல் மாலை 5 மணியளவில்கழகஉறுப்பினர்கள்சைக்கிள் ஊர்வலமாகக் கிளம்பி, பெருஞ்சேரி கிராமத்தில் நா. முத்துகுமாரசாமியும், கழனிவாசல் கிராமத்தில் கோபாலகிருட்டிணனும், மங்கநல்லூர் கடைத்தெருவில் பா வெங்கடகிருட்டிணனும் கழக கொடியை ஏற்றினைத்தனர். பின்னர் தோழர்கள் நா முத்துகுமாரசாமியும், க. முத்தையாவும் மும்முனை போராட்டத்தைப் பற்றியும் விளக்கிப் பேசினர்.

★

**உடுமலை**

15—7—54ல் கழக அலுவலகத்தில் கொடி யேற்றுவிக்கப்பட்டது, பொதுக் குழுவும் சிறை சென்ற தோழர்களும் கழக அலுவலகத்தில் கூடினர். அது போது, முத்து தலைமையில் சொக்கையன்' கனகன், இராக, வெ. காளியப்பன் ஆகியோர் பேசினர். இன்னிசை நடந்தபின் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

★

**தேனி**

15—7—54 மாலை கழகக் கட்டிடத்திலும், மணிக்கூண்டு அருகிலும் கொடியேற்றப்பட்டு, மும்முனைப் போராட்டத்தை விளக்கி, விழா கொண்டாடப்பட்டது.

★

**ஈரோடு**

15—7—54 மாலை, காரைவாய்க்கால் மைதானத்தில், தி. மு கழகம், அழகிரி சொற்பயிற்சி மன்றம் ஆகியவை சார்பில், "ஜூலைப் போராட்ட நாள்" பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத், தலைமை தாங்கினார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மற்றும் பல தோழர்கள் பேசினார்கள்.

**ஸ்ரீவைகுண்டம்**

15—7—54-ல், தி மு கழகத்தில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா கொண்டாடப்பட்டது. அதுசமயம் செயலாளர் செ. வீரராசேந்திரனும் மற்றும் கழகத் தோழர்களும் பேசினார்கள். நகரின் பல பாகங்களிலும் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

★

**புலியகுளம்**

15-7-54 காலை 6 மணிக்கு செயலாளர் ம கிருஷ்ணன் தலைமையில், தோழர் கே. நாகப்பன் கொடியேற்றினார். தோழர் ஆர் எஸ். முத்து அவர்கள் போராட்டத்தைப் பற்றி விளக்கமாகப் பேசினார்.

★

**வில்லாபுரம் (மதுரை)**

15—7—54-ல் தில்லைபாடி வள்ளியம்மைப் படிப்பகத்தில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா கொண்டாடப்பட்டது. தோழர் இரா. பாண்டியன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர் தனக்கோடி சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கினார். செயலாளர் பாண்டியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

★

**சதுப்பை**

15—7—54 சதுப்பை தி. மு. கழகத்தாரால் மும்முனைப் போர் முழக்க விழா நாள் கொண்டாடப்பட்டது. ஊர்வலம் தோழர் ரெங்கராசு தலைமையில் நடைபெற்றது. தோழர் க. வரதராசன் கழகக் கொடியை ஏற்றினார். கழக கொடி ஏற்றுவிக்க கொடிமரம் நன்கொடையாக கொடுத்த பேரறிவாளர் துரைசாமி உடையார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

★

**விசாரம்**

15—7—54ல் தி. மு கழகக் கட்டிடத்திற்கு எதிரில் மும்முனைப் போராட்ட நாள் விழா கொண்டாடப்பட்டு தோழர் ஜெயவேல் அவர்களால் கொடியேற்றிவைக்கப்பட்டது.

★

**சென்னை (30வது வட்டம்)**

15—7—54 வியாழன் காலை 7 மணிக்கு (30-வது வட்டம்) கழக பணிமனையில், அ. பொ. அரசு அவர்களால் கொடியேற்று விழாவும், சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில், சிறை சென்ற தோழர்களைப் பாராட்டி ஓர் உறுப்பினர் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள், எம். கே. கண்ணன், அ. பொ. அரசு, மல்லிமன்னன், ப. க. வேணு கோபால் எம். ஏ சுசீலன், உசேன் ஆகியோர் பேசினார்கள்.

★

**சென்னை**

15—7—54ல் சென்னை புரசைவாக்கம் தி. மு கழகச் சார்பில் மும்முனைப் போராட்ட வெற்றி விழாக் கூட்டம் இரவு 8 மணி வரைக்கும் நடைபெற்றது. தோழர் எம் சுந்தரம் தலைமையில் பல தோழர்கள் பேசினார்.

# உலக அரங்கில்

**டமாஸ்கஸ் :**

சிரியாவில் ஆகஸ்ட் 20-ம் தேதி யன்று பாராளு மன்றத் தேர்தலை நடத்துமாறு, சிரிய ஜனாதிபதி உத்திரவிட்டிருக்கிறார். சிரியப் பாராளு மன்றத்தில் 136 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று தெரிகிறது.

**டோக்கியோ :**

தென் கொரியாவுக்கு மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுச் சாமான்களை அனுப்ப ஒரு பொருளாதார மாற்று உதவி திட்டத்திற்கு வட கொரியா ஒத்துக் கொள்ளும் என்று தெரிகிறது. இதுபற்றி வட கொரியா, ஜினிவா பேச்சுகளின்போது தெரிவித்ததாம்.

**கெய்ரோ :**

எகிப்திய பிரதமர் கமால் நாசிர், எஸ்டேட்டுகளுக்குச் சொந்தமாக இருந்த 4,000 ஏகர் நிலங்களை நிலமில்லா விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சிக்காக மன்சௌரியாவில் விழா ஒன்று நடைபெற்றது. எகிப்தில் 200 ஏகருக்கு மேல் தனிப்பட்ட நபர் நிலம் வைத்திருக்கக் கூடாது என்று சட்டமியற்றப்பட்டிருக்கிறது.

**லண்டன் :**

அம்மாய் கரையோரத்தில் சென்று கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பலொன்று 'நின் செனலா' மீது சீனக் கம்யூனிஸ்டு பீரங்கிகள் கடற் கரையிலிருந்து சுட்டன என்று தெரிகிறது. இக்கப்பல் ஹாங்காங் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

• • •

பிரிட்டிஷ் விவசாய அமைச்சர் தாமஸ் டக்டேல் தனது இராஜிநாமாவை சர்ச்சிலிடம் தந்துவிட்டார் என்று தெரிகிறது. சில விஷயங்கள் பற்றி சர்ச்சிலுக்கும், இவருக்கும் கருத்து வேற்றுமை இருந்ததாம்.

**அங்காரா :**

அரபு நாடுகளின் போக்கு பற்றி கவலையுறாமல், துருக்கி—பாகிஸ்தான் இரு நாடுகளும், மத்திய கிழக்கு பாதுகாப்பிற்கான தங்கள் திட்டத்துடன் வேகமாக முன்னேறிச் செல்கின்றன என்று தெரிகிறது.

**ஜினீவா :**

அடுத்த திங்களில் அட்லியின் தலைமையில் சீனு செல்லும் தொழிற் கட்சித் தூதுக்குழுவினருக்கான ஏற்பாடுகள் பற்றி பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் செயலாளர் மோர்கன் பிலிப்ஸ், சூ-என்-லாயைச் சந்தித்துப் பேசினார்.

**பாரிஸ் :**

பிரெஞ்சிந்திய திட்டுகளின் எதிர்காலம் பற்றி இந்தியா பிரான்சிடையே பேச்சுவார்த்தைகள் சீக்கிரமே ஆரம்பமாகும் என்று தெரிகிறது. பிரெஞ்சு சர்க்கார் இப்பிரச்சினையை உடனடியாக தீர்க்க விரும்புகிறதாம்.

**ஹனோய் :**

இந்தோ சீனப் போர் நிறுத்தம் ஏற்பட்டால் ஹனோய் வியட்மின் கைகளுக்குப் போகும். கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்படப் போவதைத் தெரிந்து கொண்ட ஹனோய் மக்களிடையே மாறுதலை எதையும் காணோம். நகரின் 300,000 மக்களில் 1 லட்சம் மக்கள் கம்யூனிஸ்டுகளுக்கு வரவேற்பளிப்பார்கள் என்று தெரிகிறது.

**நியூயார்க் :**

ஐ. நா. சபையின் தலைமைக் காரியாலயத்தின் முன்னர் ஒரு சிறு கூட்டத்தினர், 'பிரிவினை வேண்டாம்' என்று எழுதப்பட்ட அட்டைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்தார்களாம். வியட்நாமின் பிரிவினையை எதிர்த்தே இவர்கள் இவ்வாறு செய்தனர் என்று தெரிகிறது.

* * *

கம்யூனிஸ்டு சீனு, தேசிய சீனு இரு நாடுகளையுமே ஐ நா சபையில் சேர்த்துக்கொள்வது சாத்தியமாகும் என்று அமெரிக்காவின் ஐ நா. விவகார உதவி அமைச்சர் டேவிட்கி என்பவர் கூறியிருக்கிறார்.

**மாஸ்கோ :**

சோவியத் கப்பல் ஒன்றை ஜூன் 23-ம் தேதியன்று தேசியச் சீனு கைப்பற்றியது பற்றி ரஷ்யா எதிர்ப்புக் குறிப்பொன்றை மூன்றாவது தடவையாக அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறது.

# 'தாயகத்துடன் இணையும் அறப்போரைத் தொடர்ந்து நடத்துவோம்'

## 'தி. மு. கழகம் இதில் என்றென்றைக்கும் பின் வாங்காது'

"திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் இன்னுள் ஆறு வாரங்கள் தலைவர்கள் சிறையினின்றும் வெளிவருவது வரையில்—போராட்டத் திட்டத்தில் மாற்றம் எதுவும் செய்யாமல், இப்படியே நடத்திச் சென்று, தலைவர்கள் வெளிவந்த பின்னர், பல கட்சித் தோழர்களையும் கலந்து, தக்கதோர் திட்டம் தீட்டி, திரு—தமிழகத்தைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கும் அறப்போரைத் தொடர்ந்து நடத்துவோம்; அதற்கு என்றென்றும் தி. மு. க. முன்னிற்கும்."

—என்று, 16—7—54ல் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில், நகர சபைத் திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், செயலாளர் தோழர் வி. எம். ஜான் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் தமது முன்னுரையில், மும்முனைப் போராட்டம் தொடங்கியதேன என்பதனையும், அதனால் ஏற்பட்ட அவலங்களையும், திரு—கொச்சி அரசாங்கம் கையாண்டு வரும் அடக்குமுறையைக் கண்டித்தும் பேசினார்.

அடுத்து, கண்ணன் புதூர் தோழர் சு. வன்னியப் பெருமாள் பேசுகையில், 1953—ஜூலை 15-ம் நாள் தி. மு. க நடத்திய மும்முனைப் போராட்டத்தைப் பற்றியும், மக்களாட்சியின் மாண்பு பற்றி அரப்பறை சாற்றிடும் பிரஜா—சோஷலிஸ்டு கட்சியினர் தமது நிர்வாகத்திலுள்ள அரசாங்கத்தில் ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதைக் கண்டித்தும், காங்கிரஸ்—பிரஜா சோஷலிஸ்டு இணைப்பின் தன்மையை விளக்கியும், தமிழக எல்லைப் போராட்டத்தின் நோக்கமும், தேவையும், முறையும் குறித்தும் பேசினார்.

பிறகு, தூத்துக்குடித் தோழர் என். நடராசன் அவர்கள் பேசுகையில் மும்முனைப் போராட்டங்களான—கல்லக்குடி போராட்டம், நேரு, தமிழர்களையும், அவர்தம் கிளர்ச்சிகளையும் பழித்து, 'நான்சென்ஸ்' என்று கூறியதை எதிர்த்து நடாத்திய இரயில் நிறுத்தப் போராட்டம், குலதர்மக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம், ஆகியவைகளைத் தொடங்கவேண்டி வந்ததின் அவசியத்தையும், தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகத்திற்கான உண்மைக் காரணங்களையும், அந்த நிகழ்ச்சிகளையும், அதற்காக அரசாங்கம் புதிதாகப் புனைந்த சதி வழக்கின் தன்மைகளையும், திரு-தமிழகப் போராட்டத்திற்குத் தாய்த் தமிழகத்திலுள்ளவர்கள் என்றும் ஆதரவு தருவர் என்பதையும், இன்றைய அரசாங்கத்தின் பிற்போக்குத் தன்மையைக் கண்டித்தும், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டியதன் இன்றியமையாமையையும் விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில், மாவட்டச் செயற்குழுவில் நிறைவேறிய, கீழ்க்காணும் தீர்மானங்கள் பெருத்த கைத்தட்டலுக்கிடையே நிறைவேற்றப்பட்டன:—

I (a) 1953-ம் வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதியில் தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும், திராவிடரின் தன்மானம் காத்து அறப்போரில் பங்கிட்டு உயிர் துறந்த தோழர்களுக்கு இப்பொதுக் கூட்டம் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(b) மேற்படி போராட்டங்களில் சர்க்கார் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகி உயிரிழந்த தோழர்களின் குடும்பத்திற்குத் தக்க நிவாரணமளிக்க வேண்டுமென இப்பொதுக் கூட்டம் சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது

(c) மேற்படி போராட்டங்களில் தடியடிபட்டு, துப்பாக்கிக் குண்டேற்று, கால் இழந்து, கையிழந்து, மனைவி உடைமைபட்டு, சிறை சென்று தன்மானங் காத்த வீரர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

(d) திராவிடரின் கலங்கருதி, திராவிடருக்குக் கேடு தரும் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை வாபஸ் செய்த சென்னை முதலமைச்சர் காமராஜரை இப்பொதுக்கூட்டம் பாராட்டுகிறது.

II (a) திரு — கொச்சியிலுள்ள தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களான, தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றின் கரை, செங்கோட்டை, தேவிகுளம், பீருமேடு சித்தூர் முதலிய தாலுக்காக்களைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கிளர்ச்சியை தி. மு. கழகம் பாராட்டுகிறது

(b) தென் இந்திய தோட்டத் தொழிலாளர் யூனியனைச் சார்ந்த தேவிகுளத்திலுள்ள பெண் தொழிலாளியை மிருகத்தனமாய் அடித்த, அதன் காரணமாக அந்த அம்மையார் இறந்ததைக் குறித்துச் சரியான முறையில் விசாரணை செய்யாமல் நியாயமற்ற ஆட்சி நடத்தும் பிரஜா—சோஷலிஸ்ட் சர்க்காரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு உடன்தானே நீதியும், நேர்மையும் கொண்ட விசாரணைக் குழு அமைத்து மேற்படி நிகழ்ச்சியை விசாரணை செய்ய வேண்டுமென்று இப்பொதுக் கூட்டம் திரு—கொச்சி அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறது.

(c) இந்திய அரசியல் சட்டப்படி பேச்சுரிமை வழங்க வேண்டிய திரு — கொச்சி சர்க்கார், தேவிகுளத்தில் மேற்படி சம்பவம் குறித்து பரிசிலனை செய்யச் சென்ற திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களான தோழர்கள் ஏ. நேசமணி எம்.பி., ஏ. ஏ. ரசாக் எம்.பி., முன்னாள் அமைச்சர் ஏ. சிதம்பரநாதன் எம்.எல்.ஏ. முதலியவர்களைக் கைது செய்ததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக தேவிகுளத்தில் நிலவிவரும் தடை உத்திரவை நீக்கிவிடுமாறும், கைது செய்யப்பட்டிருக்கும் இக்கழகத் தோழர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனவும் இப்பொதுக்கூட்டம் திரு — கொச்சி சர்க்காரையும், மத்திய சர்க்காரையும் கேட்டுக் கொள்ளுகிறது.

(d) திருவாங்கூர்—தமிழகத்திலிருக்கும் கொந்தளிக்கும் நிலைமையை மாற்றுவதற்கு வேண்டி உடனடியாக மத்திய சர்க்கார் திரு—கொச்சியிலுள்ள தமிழக எல்லையையும், கேரள எல்லையையும் நிர்ணயிப்பதற்கு எல்லைக் கமிஷனை அனுப்பி இதற்கு முடிவு காண வேண்டுமென்றும், இதற்கு ஆவன செய்யாவில்லையானால் இதனால் ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் மத்திய சர்க்கார்தான் காரணம் என்பதை இப்பொதுக் கூட்டம் வலியுறுத்திக் கூறுகிறது.

# சுட்டி அதிகாரிகளின் — துடுக்கும் அடக்கப்பட்டது!

## தமிழிலும் கணக்கெழுதலாம் எனக் கட்டளை

### சித்தூர் தமிழர் விருப்பத்திற்கு ஆந்திர சர்க்கார் இணக்கம்

ஆந்திர அரசாங்கம் எந்தப் பணிகளும், தங்கள் கணக்குகளை தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் எதிலும் வைத்துக் கொள்ளுவதால் எவ்வித ஆட்சேபணையுமில்லை என்று ஒரு பத்திரிகைக் குறிப்பில் வெளியிட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் கூறுவதாவது:—

1939-ம் ஆண்டு சென்னை பொது விற்பனை வரிச்சட்டத்தை ஆந்திர அரசாங்கம் ஒரு உத்தரவு மூலம் ஏற்றுக் கொண்டுள்ளது. தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், இந்துஸ்தானி அல்லது ஆங்கிலம் ஆகிய வற்றில் ஏதாவது ஒரு மொழியில் கணக்குக் கொள்ள அச்சட்டம் அனுமதியளிக்கிறது.

இச்சட்டத்திற்கு மாறுபாடாக விற்பனை வரித் துறையிலுள்ள சில கீழ்த்தர அதிகாரிகள் வெளியிட்ட உத்திரவுகளையும் மாகாண அரசாங்கம் நீக்கிவிட்டது.

### துவக்க விழா

21—7—54 மாலை 6½ மணிக்கு எண் 5, அக்தேனி தெரு, இராயப்பேட்டையில் ஆக்கில மன்றம் ஒன்று துவக்கப்பெறும்.

• • •

22—7—54 மாலை 4 மணிக்கு தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளி, மாணவர் தமிழ் மன்றத்தின் துவக்க விழாவும், திருவள்ளுவர் திருநாளும் மேற்படி பள்ளியின் வழிபாட்டு மண்டபத்தில் தோழர் என். என். அருணகிரி நாதர் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

• • •

22—7—54 மாலை 3 மணிக்கு காஞ்சிபுரம் கட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித் துவக்க விழா, மேற்படி பள்ளியில் தோழர் என். நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார், எம். எல். சி. தலைமையில் நடைபெறும். அவ்வமயம் ஊர் சொற்பொழிவாற்றுவர்.

# கள்ளச் சந்தையினரையும் கொள்ளை லாபக்காரர்களையும் ஒடுக்க!

## துருக்கி வீராங்கனைகளின் அணிவகுப்பு

இஸ்தான்புல், ஜூலை 19—

கொள்ளை லாபக்காரர்களையும், பண்டங்களின் விலையை உயர்த்தச் சதி செய்யும் சண்டாளர்களையும், கள்ளச் சந்தையினரையும் எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன், துருக்கியில் ஒரு மாதர் முன்னணி அமைக்கப்பட்டிருக்கிறது. இத்துறையில் சர்க்கார் அதிகாரிகள் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வராவிட்டாலும், நாங்களே தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது' என அம்முன்னணியைச் சார்ந்த ஒருவர் கூறியுள்ளார்.

சமீபகாலமாக துருக்கியில் உணவுப் பொருட்களின் விலை பயங்கரமாக உயர்ந்து விட்டிருக்கிறது ஒன்றன்பின் ஒன்றாகப் பொருட்கள் மறைந்து, மீண்டும் கள்ளச் சந்தையில் காட்சித் தந்த வண்ணம் உள்ளன. சர்க்கரை வெளிப்படையாக விற்கப்படுவதே கிடையாது. மாமிச விலையிலும், நகர சபை சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக, கூடுதலாக்கப்பட்டு விட்டு இருக்கிறது.

இந்த அக்கிரமத்தை எதிர்க்க வீராங்கனைகள் தீவிரமாக முன்வரவே, சர்க்காரும், உடனடியாக நிலைமைகளைச் சமாளிக்க ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளது. கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்கு சிறைவாசமும் அபராதமும் விதிக்கப்படும் எனக் கட்டளைப் பிறப்பித்திருக்கிறது சர்க்கார். இதன் பலனாக சென்ற வாரத்தில் சேர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் விதம் விற்றுவந்தத் தக்காளி, எட்டணா விலைக்குக் குறைத்து விற்கப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால் ... அச்சகத்தில் அச்சிட்டு ... வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.